# IN THE COURT OF THE SUBORDINATE JUDGE,

# METTUPALAYAM

## DEPOSITION OF WITNESS

## O.S. 148/2019

## CNR.No.TNCB19000

Date: 24/ 09/2024 PW1

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | ராஜேஸ்குமார் | **வயது** | 47 |
| **த/பெ** | மணி | **வட்டம்** | மேட்டுப்பாளையம் |
| **விலாசம்** | புஜங்கனூர் | **மாவட்டம்** | கோவை |
| | | **தொழில்** | |

The witness sweared under oaths Act 1969 on this the day of 24th September 2024.

வா.சா.1 மீண்டும் வரவழைக்கப்பட்டு 3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

**3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் B.Com படிக்கும் போது பாதியில் நின்றுவிட்டேன். எனக்கு கிரைய பத்திரம், ஒப்பந்த பத்திரம் ஆகியவைகள் என்ன என்று எனக்கு தெரியும் என்றால் சரிதான். கிரைய பத்திரம் மற்றும் ஒப்பந்த பத்திரத்தில் விற்பனை செய்தவற்கு முன்பு யாருக்கு எப்படி பாத்தியப்பட்டது என்று குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் சரிதான். தாவா சொத்து முழுவதும் விவசாயம் செய்யாமல் காட்டு பூமியாக உள்ளது என்றால் சரிதான்.

நான் தாவா சொத்திற்கு அருகில் தான் குடியிருக்கிறேன் என்றால் சரிதான். மொத்த தாவா சொத்தில் 5 ஏக்கர் 88 செண்டில் 1 ஏக்கர் 40 செண்டுக்கு மனைகளாக பிரித்து விற்பனை செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மனைகளாக பிரிக்கப்பட்ட சொத்தில் லே அவுட்டில் உள்ள ரோட்டை காளம்பாளையம் பஞ்சாயத்துக்கு தானமாக கொடுக்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மனைகளாக பிரிக்கப்பட்ட சொத்தில் யார் யாருக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது

என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மனைகளாக பிரிக்கப்பட்ட சொத்தில் வீடு கட்டி குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். தாவா வழக்குரையில் தாவா சொத்தில் மனைகளாக பிரிக்கப்பட்ட விபரத்தையும், அந்த மனைகளில் வீடு கட்டி குடியிருந்து வருகின்ற விபரத்தையும் நான் சொல்லவில்லை என்றால் சரிதான்.

2003 ஆம் ஆண்டு தாவா சொத்தின் ஒரு பகுதி மனைகளாக பிரிக்கப்பட்டு 2004 ஆம் ஆண்டு முதல் வீடு கட்டி குடியிருந்து வருபவர்களை தரப்பினர்களாக இந்த வழக்கில் நான் சேர்க்கவில்லை என்றால் சரிதான். 2004 ஆம் ஆண்டு முதல் தாவா சொத்தின் ஒரு பகுதியில் வீடு கட்டி குடியிருந்து வருபவர்களை எனக்கு நேரடியாக தெரியும் என்றால் சரிதான். தாவா சொத்தில் மனைகளாக பிரிக்கப்பட்டு விற்பனை செய்ததை செல்லாது என விளம்புகை பரிகாரம் கோரி 2004 ஆம் ஆண்டு முதல் ஏதேனும் வழக்கு தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. எங்களுக்கு வேண்டிய பங்கினை மட்டும் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

எங்களுக்கு பாகம் உள்ளதாக கூறி வழக்கு தாக்கல் செய்துள்ள தாவா சொத்தில் தான் மேற்படி விற்பனை செய்த மனைகள் உள்ளது என்று சொன்னால் சரிதான். 2004 ஆம் ஆண்டு முதலே விற்பனை செய்த விபரம் தெரிந்தே நான் அவர்களை சேர்க்கவில்லை என்பதால் காலவரையறைச் சட்டம் மற்றும் அவசிய தரப்பினர்களை சேர்க்காததால் வழக்கு தள்ளுபடி செய்யக் கூடியது என்றால் சரியல்ல.

தாவா சொத்து ஆதியில் சுப்பைய கவுடருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். சுப்பைய கவுடருக்கு ரங்கம்மாள் என்கிற முதல் மனைவி இறந்த பின்னர் தான் 2 வது மனைவி ஆக திருமக்காள் என்பவரை திருமணம் செய்து கொண்டார் என்றால் சரிதான். திருமக்காள் என்பவர் சுப்பைய கவுடரை திருமணம் செய்வதற்கு முன்பே ஏற்கனவே திருமணம் ஆனவர் என்றால் சரிதான். திருமக்காளின் முதல் கணவர் பெயர் தேசப்ப கவுடர் என்றால் சரிதான்.

முதல் கணவர் தேசப்ப கவுடர் மற்றும் திருமக்காள் ஆகியோர்களுக்கு பிறந்தவர்

தான் என்னுடைய தகப்பனார் மணி மற்றும் எனது சித்தப்பா துரைசாமி என்றால் சரிதான். மேற்கண்ட திருமக்காள் இரண்டாவதாக சுப்பைய கவுடர் என்பவரை திருமணம் செய்த பிறகு சுந்தர மூர்த்தி என்பவர் மகனாக பிறந்தார் என்றால் சரிதான். மேற்கண்ட சுந்தரமூர்த்தியின் மனைவி 3 ஆம் பிரதிவாதி என்றும் அவர்களுடைய மகள்கள் 4 மற்றும் 5 ஆம் பிரதிவாதி என்றால் சரிதான். மேற்கண்ட சுப்பைய கவுடருக்கும் - திருமக்காளுக்கும் பிறந்த சுந்தரமூர்த்தி என்பவரின் நேரடி வாரிசுகள் 3 முதல் 5 பிரதிவாதிகள் என்றால் சரிதான்.

எனது தந்தை மணி மற்றும் எனது சித்தப்பா துரைசாமி என்பவர்கள் தேசப்ப கவுடருக்கு பிறந்தவர்கள் என்றால் சரிதான். எனது தந்தை மணி மற்றும் எனது சித்தப்பா துரைசாமி என்பவர்கள் தேசப்ப கவுடருக்கு பிறந்தவர்கள் என்பதால் சுப்பைய கவுடருக்கு வாரிசுதாரர்கள் அல்ல என்றால் சரிதான். சுப்பைய கவுடருக்கும் மணி மற்றும் துரைசாமிக்கு எந்த வித இரத்த பந்தம் இல்லை என்றால் சரிதான். அந்த வகையில் சுப்பைய கவுடருக்கு பாத்தியப்பட்ட சொத்திற்கு எவ்வகையிலும் எனக்கு பாத்தியப்பட்டது அல்ல என்றால் சரியல்ல.

சுப்பைய கவுடரின் வாரிசு சான்றிதழ் மற்றும் இறப்பு சான்றிதழ்களை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. சுப்பைய கவுடரின் முதல் மனைவிக்கு பிறந்த கானிச்சாமி என்பவருக்கு பாகப்பிரிவினை செய்து சொத்தின் ஒரு பகுதியை 1969 ஆம் ஆண்டே கொடுத்துவிட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த பாகப்பிரிவினை படி இரண்டு பாகமாக பிரிக்கப்பட்டது அதில் ஒரு பாகம் 2 ஏக்கர் 90 செண்ட் சுப்பைய கவுடருக்கும் மற்றொரு பாகம் 2 ஏக்கர் 98 செண்ட் கானிச்சாமிக்கும் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான்.

கானிச்சாமிக்கு ஒதுக்கப்பட்ட பாகமான 2 ஏக்கர் 98 செண்டில் க.சா.எண்.348/1B ல் 3 செண்ட் நிலம் எனது தகப்பனார் மணி கிரையம் பெற்றார் என்றால் சரிதான். அந்த 3 செண்ட் பூமியில் தான் நான் குடிருந்து வருகிறேன் என்றால் சரிதான். அந்த 3 செண்டுக்கு மேல்புறம் தான் 3 முதல் 5 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்து

உள்ளது என்றால் சரிதான். 3 முதல் 5 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்தில் 2 செண்ட் சேர்த்து நான் ஆக்கிரமிப்பு செய்துள்ளேன் என்றால் 40 ஆண்டுகளுக்கு முன்பே வீடு கட்டப்பட்டது. 2 செண்ட் ஆக்கிரமிப்பு செய்தது சம்பந்தமாக மேட்டுப்பாளையம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் 3 வழக்குகள் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். 40 ஆண்டுகளுக்கு முன்பே வீடு கட்டப்பட்டதாக நான் சொல்வது பொய் என்றும் நான் ஆக்கிரமிப்பு செய்ததால் தான் மேட்டுப்பாளையம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

நான் ஆக்கிரமிப்பு செய்த 2 செண்ட் நிலத்தை நானே வைத்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தில் தான் தாவா சொத்தில் உரிமையில்லாத நான் இந்த தாவாவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்குகள் தற்போதும் நிலுவையில் இருந்துவருகிறது என்றால் சரிதான். சுப்பைய கவுடர் உயில் மூலம் எழுதி கொடுத்த சொத்தான தாவா சொத்தின் ஒரு பகுதியான 1 ஏக்கர் 40 செண்ட் நிலத்தை 3 முதல் 4 பிரதிவாதிகள் அடைந்து அதை விற்பனை செய்துவிட்டார்கள் என்றால் சரிதான்.

தாவா சொத்தில் ஒரு பகுதியான 1 ஏக்கர் 40 செண்ட் போக மீதமுள்ள 1 ஏக்கர் 50 செண்ட் நிலத்தை 26.03.1987 ஆம் ஆண்டு சுப்பைய கவுடரின் மகன் சுந்தரமூர்த்திக்கும் 3 ஆம் பிரதிவாதிக்கும் கூட்டாக பதிவு செய்யப்பட்ட கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. 1987 ஆம் ஆண்டே தாவா சொத்தின் ஒரு பகுதியை கிரையம் கொடுத்து விட்டதால் நான் கேட்கக் கூடிய பரிகாரம் எனக்கு கிடைக்கக் கூடியது அல்ல என்றால் சரியல்ல.

சுப்பைய கவுடருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் அனைத்தும் பாராதினங்கள் செய்யப்பட்டு சுப்பைய கவுடரே எழுதி கொடுத்து விட்டதால் பாகப்பிரிவினை செய்வதற்கு எந்த தாவா சொத்துக்களும் இல்லை என்றால் சரியல்ல. சுப்பைய கவுடர் இறந்த பின்னர் அவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் பாராதீனம் செய்யப்பட்டதால்

அந்த சொத்துக்கள் மீது எனக்கு எந்தவிதமான உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. சுப்பைய கவுடர் 26.08.1992 ஆம்தேதி இறந்து விட்டதால் அவர் எழுதி வைத்த உயில் நடைமுறைக்கு வந்து விட்டது என்றும் 3 முதல் 5 பிரதிவாதிகள் தாவா சொத்தில் ஒரு பகுதியை அனுபவித்து 2004 ஆம் ஆண்டே விற்பணை செய்து விட்டதால் எனக்கு தாவா சொத்தில் எந்த வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல.

தாவா சொத்தின் ஒரு பகுதியான கிரைய வகையில் பாத்தியப்பட்ட 1 ஏக்கர் 50 செண்ட் பூமியை 1987 ஆம் ஆண்டு முதல் சுவாதீனத்தில் இருந்தே 3 முதல் 5 பிரதிவாதிகள் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். எனக்கும் 3 முதல் 5 பிரதிவாதிகளுக்கும் எந்த விதமான இரத்த சம்பந்தமும் இல்லாததால் தாவா சொத்தில் பாகம் கேட்க எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தை பொறுத்து திருமக்காள் இறப்பதற்கு முன்பே சுப்பைய கவுடரின் தாவா சொத்துக்களை பொறுத்து அவரே பாராதீனம் செய்துவிட்டதால் தாவா சொத்தில் பாகம் கேட்க எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. நான் தாவா சொத்தில் சுவாதீனத்தில் இல்லை என்றும் நான் நீதிமன்ற கட்டணம் முறையாக செலுத்தாததாலும் இந்த தாவா நிலைக்கதக்கது அல்ல என்றும் இந்த வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி
என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

Sd/- K. Palanivel.

சார்பு நீதிபதி,

சாட்சியின் கையொப்பம்

மேட்டுப்பாளையம்.